# புதியதாக சீரமைக்கப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு 45 பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் ஆணை

சுருக்கம்

பள்ளிக்கல்வி –பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி – புதியதாக சீரமைக்கப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு 45 பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித்துறை

அரசாணை (நிலை) எண். 249 | நாள். 29. 11. 2018

விளம்பி கார்த்திகை 13

திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 101 பள்ளிக்கல்வி (வரவு செலவு ) துறை நாள். 18.05.2018
2. அரசாணை (நிலை) எண். 108 பள்ளிக்கல்வித் (பக4(1))துறை நாள். 28.05.2018
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.37633/சி2/இ1/2018 நாள் 14.06.2018

ஆணை

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளிக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் அனைத்து பள்ளிகளையும் திறம்பட ஆய்வு செய்யவும், அரசின் நலத்திட்டங்களை உருவாக்கி மாணவ–மாணவியருக்கு கொண்டு சேர்க்கவும் ஆசிரியர்களின் குறைகளை தீர்க்க அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் ஆகிய பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு மாவட்ட கல்வி அலுவலர் என்ற பெயரில் செயல்பட ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 52 சீரமைக்கப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர்கள் புதிய இடத்தில் செயல்பட அரசு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அரசால் புதியதாக சீரமைக்கப்பட்ட மாவட்ட கல்வி அலுவலகங்களில் நிர்வாகப் பணிகளை கவனிக்கும் பொருட்டு மாவட்ட கல்வி அலுவலர் பணியிடம் மற்றும் பணியாளர்கள் பணியிடங்களை பணி நிரவல் மூலம் ஒதுக்கீடு செய்து சீரமைக்கப்பட்ட புதிய மாவட்ட கல்வி அலுவலர்கள் செயல்பட்டு வருகிறது.

3. வேலை மூன்றாவதாக படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதத்தில் புதியதாக சீரமைக்கப்பட்ட கல்வி மாவட்ட அலுவலர் பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்படாத நிலையில், தமிழக அரசின் விலையில்லா திட்டங்கள் நிறைவேற்றுவது, கலந்தாய்வின்போது மாணவ/ மாணவிகளின் சேர்க்கை விவரத்தை ஆய்வு செய்வது மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்/ முதன்மை கல்வி அலுவலர் ஆய்வு பணிக்கு உதவி செய்வது போன்ற செயல்பாட்டிற்கு பள்ளி துணை ஆய்வாளர் பணியிடம் மிகவும் அவசியமாகிறது என்பதாலும் மாவட்டத்தில் ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மை கல்வி அலுவலர் ஆகியோர் நடத்தும் கூட்டங்களுக்கு பள்ளித் துணை ஆய்வாளர்களின் பங்களிப்பும் தேவை என்பதையும் பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்படுகிறது அவசியமாகிறது என்று தெரிவித்துள்ளார். எனவே, புதியதாக சீரமைக்கப்பட்ட மாவட்ட கல்வி அலுவலகங்களில் 45 மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்படாத நிலையில் அந்த 45 மாவட்ட கல்வி

அலுவலர்களுக்கு 45 பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்களை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார் மேலும் பள்ளி துணை ஆய்வாளர் பணியிடம் பட்டதாரி ஆசிரியர் பணியிடமும் ஒத்த பணியிடம் என்பதால் இவ்விரு பணியிடங்களுக்கும் ஒத்த ஊதிய விகிதம் என்பதாலும், அரசுக்கு எவ்வித கூடுதல் செலவினம் ஏற்படாது என்பதால், நிர்வாக நலன் கருதி மாவட்ட கல்வி அலுவலகங்களில் பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்களை அனுமதிக்கலாம் என்றும், அவ்வாறு அனுமதிக்கப்படும் பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்களில் தகுதிவாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களை கொண்டு நிரப்பிக்கொள்ளவும், அரசின் ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குனருக்கு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு பள்ளிகளில் 01.08.2017 நிலவரப்படி ஆசிரியரின்றி உபரியாக கண்டறியப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரின் பொதுத்தொகுப்பிற்கு கொண்டு வரப்பட்டதில் 45 பணியிடங்களை அரசுக்கு சரண் செய்து, 45 பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்களை தோற்றுவிக்கலாம் எனவும், இவ்வாறு இவ்விரு பணியிடங்களும் ஒத்த பணியிடமாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதனால் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படாது எனவும், 45 பள்ளி துணை ஆய்வாளர் பணியிடம் தோற்றுவிக்க அரசுக்கு சரண் செய்யப்படும் பள்ளிக்கல்வி இயக்குநர் தொகுப்பில் ஆசிரியரின்றி உபரியாக உள்ள 45 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் சரண் செய்யப்படும் என்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துரு அரசு ஆய்வு செய்யப்பட்டு, பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு பள்ளிகளில் உபரி என கண்டறியப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், பள்ளி துணை ஆய்வாளர் பணியிடத்திற்கு பணியிடமாக வகைப்படுத்தப்பட்ட நிலையில் பள்ளிக் கல்வித் துறையில் புதிதாக சீரமைக்கப்பட்டுள்ள மாவட்ட கல்வி அலுவலகங்களில் பள்ளி துணை ஆய்வாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டி இணைப்பு –I 45 அலுவலகங்களுக்கு இணைப்பு –II குறிப்பிடப்பட்டுள்ள 45 உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் செய்து அதற்கான அதே ஊதியத்தில் (நிலை 16 குறைந்தபட்ச ஊதியம் ரூ.36,400/– ( ரூ.36,400 – 1,15,700) 45 பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 3 –ல் ஒப்பளிக்கப்பட்ட செலவீனம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பில் பற்றி வைக்கப்பட வேண்டும் .

   "2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 101 – ஆய்வு – மாநிலச் செலவினங்கள் – AA பொதுப்பள்ளிகள் ஆய்வு – 01 சம்பளங்கள்"

[த.தொ.கு2202–02–101–A0104]

6. மேலே பத்தி 4 இல் குறிப்பிட்டுள்ள செலவினம்ஒரு "புது துணைப்பணி" (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கன் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாரா செலவு முன்பணம் ஒப்பளிப்புக்கான ஆணைகள் நிதித்த (வரவு செலவு பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாக கணக்கீட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தை எதிர் பார செலவின விதிகள் 1963 ல் உள்ள அட்டவணை "அ" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இருபடிகளில் நிதித் (வ. செ. பொ–1) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி, தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இக் கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018–2019–ஆம் ஆண்டிற்கான துணை

மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வ. செ. பொ–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. பள்ளிக்கல்வித்துறை நிர்வாக சீரமைப்பு தொடர்பாக கூடுதல் பணியிடங்கள் புதிய பணியிடங்கள் ஏதேனும் தோற்றுவிக்க வேண்டிய நிலை எழவில்லை என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளதால், இனி கூடுதல் / புதிய பணியிடங்கள் கோரக் கூடாது எனவும் அரசு ஆணையிடுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் கோப்பு எண்.58039/கல்வி II நாள்.27.11.2018 மற்றும் அ.சா.கு எண். 60852/மைமஆபி/2018 நாள் 28.11.2018 ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2039 (இரண்டாயிரது முப்பத்தி ஒன்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்